செய்தி வெளியீடு எண். 114 நாள்.09.09.2019

# பத்திரிக்கை செய்தி

சென்னையில் செயல்பட்டு வரும் சென்னை–32, கிண்டி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்(தொழில் நுட்பம்) மற்றும் சென்னை–4, சாந்தோம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்(தொழில் திறனற்றோருக்கானது) ஆகிய இரு அலுவலகங்கள் தனித்தனியாக இயங்கி வந்தன,. தற்போது மேற்கண்ட இரு அலுவலகங்களும் தமிழக அரசாணை எண். 132 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(என்1) துறை நாள் 30.07.2019ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைகளின் படி சென்னை–4, சாந்தோம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்துடன் 01.09.2019 முதல் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

மேற்கண்ட இரு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள பதிவுதாரர்கள் செப்டம்பர் மாதம் 01.09.2019 முதல் தங்களது வேலைவாய்ப்பு பதிவினை புதுபித்தல், கூடுதல் பதிவு, புதிய பதிவு,முகவரி மாற்றம் மற்றும் அனைத்து அலுவலக பதிவு பணிகளையும் மேற்கொள்ள சென்னை, சாந்தோமில் உள்ள இவ்வலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

மேற்கண்ட இரு அலுவலகங்கள் மற்றும் இவ்வலுவலகமும் இணைந்து செயல்படுவதால் தனியார் மற்றும் அரசு வேலைவாய்ப்பு சம்பந்தமான பரிந்துரை பட்டியல் கோரும் வேலையளிப்போர், 01.09.2019 முதல் சென்னை, சாந்தோமில் உள்ள இவ்வலுவலகத்ததை தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு கீழ்காணும் முகவரியில் உள்ள அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம்,
எண்.56, ஜெயபிரகாஷ் நாராயணன் மாளிகை,
குயில் தோட்டம், சாந்தோம் நெடுஞ்சாலை, சென்னை–600 004.
தொலைபேசி எண். 044–24615160

**இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி ஆர். சீத்தாலட்சுமி., இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.**

**வெளியீடு**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**சென்னை–01**